**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 622/2022.**

**வழக்கு சாட்சி – அ.சா.1 (பட்டியல் சாட்சி – 1).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பாரிஜாதம். | ஜாதி | |
| கணவர் பெயர் | சந்திரசேகரன். | தொழில் | யோகா சர்வீஸ். |
| கிராமம் | ஆண்டிபட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 60/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2026.

**(1–வது எதிரி ஆஜர். 2–வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

(1) நான் தற்போது, ஆண்டிபட்டியில் குடியிருந்துகொண்டு, யோகா சர்வீஸ் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எனது உறவினர் மூலமாக எனக்குத் தெரிந்த சாவித்திரி என்ற நபர் ஆன்மீக பயணம் செய்வதற்கான கடந்த 2022 ஆம் வருடம் மார்ச் மாதம் எனக்கு வாட்ஸ்–அப் மூலமாக செய்தி அனுப்பியிருந்தார். அந்த செய்தியை நான் சாவித்திரி என்பவரிடம் ஆன்மீக சுற்றுப் பயணம் சம்பந்தமாக கேட்டபோது, மேற்படி செய்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொர்பு எண்ணை, தொடர்பு கொண்டு பேசிக்கொள்ளுமாறு கூறினார். நான் செய்தியிலிருந்து ஆஜர் எதிரியின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசியபோது, தான் பத்ரிநாத், கேதார்நாத் ஆகிய இடங்களுக்கு சுற்றுப் பயணம் அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

(2) மேலும், அவர் என்னுடன் சில நபர்களை சேர்த்துக்கொண்டு ஆன்மீக பயணம் செல்லும்படி கூறினார். நான், எனக்குத் தெரிந்த நபர்களை பத்ரிநாத், கேதார்நாத் ஆகிய இடங்களுக்கு ஆஜர் எதிரி பட்டியலிட்டு அனுப்பியிருந்த செய்தியிலிருந்து 7–வது அட்டவணையைத் தேர்ந்தெடுத்து, அந்தத் தேதியில் செல்வதாகத் தெரிவித்தேன். ஆஜர் எதிரி ட்ரெயின் சேவைக்கு பதிவு

செய்யவேண்டும் என்று கூறி, ஆளுக்கு ரூ.3,000/- வீதம் முன்பணமாக அனுப்பவேண்டும் என்று கூறியிருந்தார். அதனடிப்படையில் நான் ஏற்ககனவே சொல்லியிருந்த நபர்களிடம் முன்பணம் பெற்று ரூ.1,00,000/- மற்றும் ரூ.20,000/-, அதன்பின்னர் ரூ.2,20,000/- பல்வேறு தேதிகளில் ஆஜர் எதிரிக்குச் சொந்தமான KVB வங்கிக் கணக்கு, ஆண்டிபட்டிக்கு அனுப்பியிருந்தேன்.

(3) எனக்குத் தெரிந்த 2 நபர்கள், ஆஜர் எதிரி ஏற்கனவே கொடுத்திருந்த Google Pay எண்ணிற்கு ரூ.18,000/- வீதம் மொத்தம் ரூ.36,000/- அனுப்பியிருந்தார்கள். அதன்பின்னர், சுற்றுப் பயணம் செல்வது சம்பந்தமாக எதிரிக்கு போன் மூலம் தொடர்பு கொண்டபோது, சுமார் 15 நாட்களுக்குப் பின் எதிரியை தொடர்பு கொள்ளமுடியவில்லை. எதிரியிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. அதன்பின்னர், நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். தற்போது, என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை, குறுக்கு விசாரணை செய்யப் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞரால் காலஅவகாசம் கோரப்பட்டது. எனவே, குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.09.03 14:24:39 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**